<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 5/2020 | சாட்சியம் | : | **MW1** |
| **Name** | : | திரு.சாந்தமூர்த்தி | | | |
| **Date** | : | **11.06.2026** | | | |
| **Time** | : | **11.30 a.m to 11.56 a.m** | | | |

<u>நி.த.சா.**1.**திரு.சாந்தமூர்த்தி என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். எனக்கு சாட்சியமளிக்க நிர்வாகத்தால் அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் கொடுக்கப்பட்டுள்ளது அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் ஆனால் நீதிமன்ற ஆவணத்தில் அவை இல்லை என்றால் தெரியாது. வழக்கு விபரம் முழுவதுமாக தெரியும். நான் சீனியர் மேனேஜராக உள்ளேன். மனுதாரருக்கு எதிராக நடந்த உள்துறை விசாரணையில் நான் கலந்து கொண்டேன். உள்துறை விசாரணை பற்றிய முழு விவரம் தெரியும். உள்துறை விசாரணை நடவடிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் அவர் தாக்கல் செய்தாரா இல்லையா என

தெரியாது. உள்துறை விசாரணை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் முழுமையாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படும் பட்சத்திலேயே அந்த விசாரணை முறையாக நடைபெற்றதா இல்லையா என முடிவு செய்ய இயலும் என்றாலும் அந்த ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தெரியாது. நி**.**சா**.**ஆ**.1** என்ன ஆவணம் என்றால் விசாரணை அறிக்கையாகும். நி**.**சா**.**ஆ**.2** தர கட்டுப்பாட்டு பிரிவிலிருந்து HR-க்கு கொடுத்த கடிதம் ஆகும். உள்துறை விசாரணை எந்த தேதிகளில் நடந்தது என்றால் தெரியாது. எத்தனை நாட்கள் விசாரணை நடைபெற்றது என்றால் 5 நாட்கள் நடந்தது. உள்துறை சார்பில் முதல் நாள் அன்று யார் யார் ஆஜரானார்கள் என வருகை பதிவு செய்யப்படும் என்றால் ஆமாம். ஐந்து நாட்கள் நடந்த உள்துறை விசாரணையில் மனுதாரர் எத்தனை நாட்கள் கலந்து கொண்டார் என்றால் மூன்று நாட்கள் கலந்து கொண்டார். நிர்வாக தரப்பில் மேலாளர் திரு**.**வீரராகவன் குவாலிட்டி பிரிவு டீம் லீடர் மற்றும் என்னை சாட்சியாக விசாரித்தார்கள். நிர்வாக தரப்பில் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன என தெரியாது. நிர்வாக தரப்பு சாட்சிகளை மனுதாரர் குறுக்கு விசாரணை செய்தார். சாட்சியாக விசாரிக்கப்பட்ட டீம் லீடரின் பெயர் தெரியாது. ஒவ்வொரு நாள் விசாரணையின் போதும் விசாரணை அதிகாரி ஒரு குறிப்பு எழுதி சாட்சிகளிடம் கையெழுத்து வாங்குவார் அதுபோன்று இந்த வழக்கிலும்

வாங்கப்பட்டதா என்றால் ஆமாம். விசாரணையில் மனுதாரர் கலந்து கொள்ளாதது சம்பந்தமாக விசாரணை அதிகாரி கடிதம் எதுவும் மனுதாரருக்கு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். அந்த கடிதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்து விட்டோம். விசாரணை அதிகாரியின் பெயர் சம்சுதீன். நி**.**சா**.**ஆ**.1** ல் யாருடைய கையெழுத்தும் காணப்படவில்லை என்றால் என்னுடைய கையெழுத்து உள்ளது. தொ**.**சா**.**ஆ**.8-**ல் யார் கையெழுத்து போட்டு உள்ளார்கள் என்றால் இப்ராஹிம் என்பவர் கையெழுத்து போட்டுள்ளார். நி**.**சா**.**ஆ**.1** ல் விசாரணை அதிகாரியின் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. உள்துறை விசாரணை எதுவும் நடைபெறவில்லை என்றாலும் உள்துறை விசாரணை நடைபெற்றது போன்று ஆவணங்கள் தயார் செய்து நாங்கள் தாக்கல் செய்திருக்கிறோம் என்றாலும் சரியல்ல. தொ**.**சா**.**ஆ**.9** ல் சொல்லி உள்ளது போன்று விசாரணை அறிக்கை 25.07.2016 தேதியிட்டது எதுவும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்து விட்டோம். தொ**.**சா**.**ஆ**.10** மனுதாரர் விசாரணை அறிக்கை நகல் அவருக்கு வழங்கப்படவில்லை என தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் தெரியாது. உள்துறை விசாரணைக்கு தேதி நிர்ணயம் செய்துவிட்டு உள்துறை விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை என்றாலும் ஆனால் உள் துறை விசாரணை நடந்தது போன்ற அவருக்கு காரணம் கேட்கும் அறிவிப்பு

கொடுக்கப்பட்டது என்றாலும் அதன் பெயரில் மனுதாரர் விசாரணை முடிவறிக்கை கேட்டு கடிதம் அனுப்பிய பின்னரும் நாங்கள் அவருக்கு அதனை வழங்கவில்லை என்றாலும் விசாரணை நடைபெறாமலேயே நடைபெற்றதாக தெரிவித்து அவரை பணி நீக்கம் செய்தது செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரி அல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by her to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:11.06.2026.